திரு. கே. எஸ். கணபதி : இதுபோன்ற சங்கங்கள் பரவலாக இருந்தாலும் கூட, அந்தச் சங்கங்கள் பெயரளவிலேதான் இருக்கின்றனவே தவிர, செயல் படும் அளவுக்கு இல்லை. இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கும்போது, இது பற்றிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் அந்தச் சங்கங்களுக்கு இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முடிவெடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு வராது. ஆனால், சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த அந்தச் சங்கம் பயன்படும். ஆசிரியர்களையும், மற்றவர்களையும் ஓரளவுக்குச் சமாதானப் படுத்த அந்தச் சங்கங்கள் பயன்படும். நன்றாக இருக்கின்ற தலைமை யாசிரியரைக்கூட, அவர் நன்றாக வேலை வாங்குகின்ற தலைமையாசிரியராக இருந் தால், எல்லோரும் ஒன்று சேர்ந்துகொண்டு, வேறு எங்காவது மாற்றிவிட வேண்டும் என்று நினைத்து, இந்த மாதிரிக் காரியங்கள் செய்கின்றார்கள். இது நிமித்தம் தேவைப்படும் முக்கியமான நடவடிக்கைகளை அதிகாரிகள்தான் எடுக்க வேண்டும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : பெற்றோர்கள் சங்கங்களுக்கு அந்த மாதிரி முடிவெடுக்கும் உரிமைகள் கொடுத்தால், அவர்கள் அதை வைத்துச் செயல்பட வாய்ப்பு இருக்கும். ஆகவே, அது எவ்வாறு செயல்படலாம் என்று நடைமுறைப்படுத்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் பள்ளியினுடைய வளர்ச்சி பற்றிய சூழ்நிலையைக் கவனித்துக்கொள்ள கருத்துக்கள் சொல்ல முடியும். ஆனால் இப்படிப்பட்ட வகைகளிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிப்புக்களைத் திரட்டி வைத்து ஆராய்ந்து, ஒரு முடிவு எடுக்கும் வாய்ப்பு ஏற்படாது. ஆனால் நடைமுறையில் ஒரு பள்ளியினுடைய வளர்ச்சிக்கு கருத்துக்கள், அறிவுரைகள் வழங்குகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்.

Opening of Girls' School at Tiruparankundram, Madurai.

* 4. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the teachers of a Girls' High School at Tirunagar, Madurai, requesting the Government not to grant permission to open a new Girls' School at Tiruparankundram, Madurai; **and**

(*b*) if so, the action taken thereon?

1975 அக்டோபர் 24]

மதுரை, திருப்பரங்குன்றத்தில் மகளிர் பள்ளியைத் தொடங்குதல்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, திருப்பரங்குன்றத்தில் மகளிர் பள்ளியொன்றைப் புதிதாகத் தொடங்க அனுமதி அளிக்க வேண்டாமென்று அரசைக் கேட்டுக் கொள்ளும் முறையீடு ஏதேனும் மதுரை, திருநகரிலுள்ள மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) விதிகள் 1974, 1—12—1974 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி விதிகள் 4-ன் கீழ் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க அனுமதி வழங்கும் அதிகாரம் பள்ளிக் கல்வி இணை இயக்குநருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் திருப்பரங்குன்றத்தில் புதிய மகளிர் உயர்நிலைப் பள்ளி திறக்கும் கருத்துருவை பரிசிலிக்கும்பொழுது திருநகர் மகளிர் பள்ளி ஆசிரியர்களின் இம்முறையீட்டை கருத்தில் கொண்டு முடிவு எடுத்துள்ளார்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட்டுள்ள முடிவு என்னவென்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருப்பரங்குன்றத்திலே இந்த ஆண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளி திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: ஆசிரியர்களிடமிருந்து என்ன முறையீடு வந்தது, இந்தப் பள்ளியைத் திறப்பதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்று அவர்கள் முறையீடு அனுப்பியிருக்கின்றார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மதுரை திருநகர் சீதா லட்சுமி பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சொல்லியது என்னவென்றால் திருப்பரங்குன்றத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் நிறுவனத்தின்கீழ் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளி திறந்தால், இரண்டுக்கும் இடையே உள்ள தொலைவு ஒரு மைல்தான்; ஆக, அங்கு பள்ளி திறந்தால், இங்கிருக்கும் மாணவிகளின் எண்ணிக்கை குறையுமென்றும், அதன் நிமித்தம் ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடும் என்றும் சொன்னார்கள். இவற்றைக் கருத்தில்கொண்டு, தேவையான புள்ளி விவரங்கள் எடுத்துப் பார்த்ததில், அந்தப் பள்ளியில் இருக்கும் அதிகமான ஆசிரியர்கள் பாதிக்கப்

படமாட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியே பாதிக்கப்படும் சூழ்நிலை இருந்தாலும், அப்படி பாதிப்பு ஏற்பட்டு வேலையின்றிப் போகின்ற ஆசிரியர்களை தாங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் நிறுவனம் வாக்குறுதி தந்ததால்தான், இவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: இரண்டு பள்ளிகளுக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோமீட்டர்கூட இல்லை. மதுரை திருநகர் சீதாலட்சுமி உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் மொத்த மாணவிகள் 650 பேர்கள். திருப்பரங்குன்றத்திலே 200 பேர்கள் இருக்கின்றார்கள். மொத்தம் 30 ஆசிரியர்கள் பணியில் இருக்கின்றார்கள். இந்தப் பள்ளி துவக்கப்பட்டால், அதன் நிமித்தம் சீதா லட்சுமி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கட்டாயமாக வேலை இழக்க நேரிடும். தற்போது ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் 1 : 20 என்றிருக்கிறது. அந்த 200 மாணவர்களும் போய்விட்டால், 1 : 10 என்று குறைந்துவிடும். ஆகவே ஆசிரியர்கள் கட்டாயமாக பணியிழக்க நேரிடும். மேலும் சுந்தரேசுவரர் திருக்கோயில் அறநிலையத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பள்ளியை ஏற்படுத்த அனுமதி வழங்காமலிருப்பது நியாயமில்லையா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் பல மாதங்களாக ஆராய்ந்து, பல கூட்டங்கள் போட்டுப் பேசி, அதன்பின்புதான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆசிரியர்கள் யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டால், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் நிறுவனத்தினர் கட்டாயமாக அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. இது சம்பந்தமாக எந்த விதமான புகாரும் எனக்கு வரவில்லை. சமீபத்தில்கூட நான் மதுரைக்குப் போயிருந்தேன். அப்போதுகூட இது சம்பந்தமான எந்தவிதப் புகாரும் எனக்கு வரவில்லை. அப்படி யாருக்கேனும் பணி இழப்பு ஏற்பட்டால், அவர்களை எடுத்துக்கொள்ளச் சொல்ல, அவர்களுக்கு வேலை கொடுக்கச் சொல்ல, நமக்கு வழிவகை இருக்கிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: புதியதாக பள்ளிகள் திறக்கப்படும் காலத்திலே, ஏற்கெனவே பணியாற்றி வந்த நிரந்தர ஊழியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே அவ்வாறு மாணாக்கர்கள் எண்ணிக்கை குறைவினால், பணி இழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவானால், அதற்கு அரசுப்

1975 அக்டோபர் 24]

பள்ளிகள் பொறுத்து திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்து, புதியதாகத் திறக்கப்படும் பள்ளியிலாவது, அல்லது அருகிலுள்ள பள்ளியிலாவது பணிக் கமர்த்த அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆண்டு கட்டப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும், அது அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, இந்த நிபந்தனையின் அடிப்படையிலேதான் மேற் கொள்ள வேண்டும் என்று முதன்மைக் கல்வி அதிகாரிகள் அங்கீகாரம் கொடுக் கிறார்கள். அரசுப் பள்ளிகள் ஏற்பட்டாலும், தனியார் பள்ளி ஏற்பட்டாலும், ஆசிரியர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருந்தால், அவர்களுக்குக் கட்டாய மாக அந்தப் பள்ளியில் முதலிடம் கொடுப்பதாக இருந்தால்தான், அங்கீகாரம் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில்தான், அங்கீகாரம் கொடுக்கப் படுகிறது.

திரு. கே. ராஜாராம்: ஏற்கெனவே திருநகரில் உள்ள சீதாலட்சுமி உயர் நிலைப் பள்ளி என்று ஒரு டிரஸ்டினால் நடத்தப்படும் பள்ளியில் 30 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அது மிக நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கின்றது என்று கல்வி இலாகாவிலேகூட ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். புதிய பள்ளியை திருப்பரங்குன்றத்தில் ஏற்படுத்தினால்—திருப்பரங்குன்றம் வேறு, திருநகர் வேறு என்று இல்லை, இரண்டு அல்லது மூன்று பர்லாங்குகள்தான் இருக்கும்— திருநகர் பள்ளி பாதிக்கப்படும் என்பது ஒரு புறம் இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான்காவது ஐந்தாவது கேள்விகளை ஒன்றாக எடுத்துக்கொண்டு பதில் சொல்லியிருப்பதாக எண்ணுகிறேன். கல்லூரி ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற பிரச்சினை இந்த ஐந்தாவது கேள்வியில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி ஒரு கோரிக்கை வந்துள் ளதா? அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்திலிருந்து அல்லது சீதாலட்சுமி டிரஸ்ட்டிலேயிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா? அதுபற்றிப் பரிசீலித்து அனுமதி கொடுக்க அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். கேள்வி ஐந்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் நான்கும் ஐந்தும் ஒரே மாதிரியாக இருப்பதனால், சேர்த்தே எடுத்துக்கொள்ளலாம்.

* 5. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that there is a proposal to open a Girls' High School at Tiruparankundram; and

(*b*) if so, whether the Government will consider opening a Women's College instead of a Girls' High School there?

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருப்பரங்குன்றத்தில் மகளிர் உயர்நிலைப் பள்ளியொன்று தொடங்கும் செயற்குறிப்பு ஒன்றுள்ளது உண்மையா ?

(இ) அங்கு மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்குப் பதிலாக மகளிர் கல்லூரியொன்று தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். 1975-76-இல் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

(இ) கல்லூரி திறப்பதற்கான அனுமதி வேண்டி மனு எதுவும் பெறப் படவில்லை. ஆகையால் பெண்கள் கல்லூரி திறக்கும் பிரச்சினை ஏற்படவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : பள்ளியாண்டு ஆரம்பிக்கும் காலத்திலே, மதுரை மாநகரைப் பொறுத்த அளவில், தென் பகுதியிலே கல்லூரி இல்லை. பெண் களுக்காக கல்லூரி இல்லாததால், பெண்கள் இடம் தேடி அலைகின்ற பரிதாப மான நிலைமை இருக்கின்றது. இந்தக் காரணத்திற்காகவாவது, மதுரை வைகை ஆற்றின் தென் பகுதியில் ஒரு கல்லூரி திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது மதுரை மாநகரில் நான்கு பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன. ஒன்று, மீனாட்சி சுந்தரேஸ்வரர் அரசினர் மகளிர் கல்லூரி, இரண்டு, லேடி டோக் கல்லூரி, மூன்று, பாத்திமா கல்லூரி, அடுத்து நான்காவதாக சென்ற ஆண்டுதான் யாதவா பெண்கள் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது. ஆக நான்கு பெண்கள் கல்லூரிகள் அங்கே இருக்கின்றன.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் மகளிர் கல்லூரியில் அதிகமான அளவுக்கு மாணவிகள் இருக்கின்றார்கள். இடவசதி மற்ற வசதிகள் இருக்கின்றன. மற்ற மூன்று கல்லூரிகளில் உள்ள வசதிகள், மாணவிகளின் எண்ணிக்கை இவைகளை யெல்லாம் பார்த்து, இன்னொரு கல்லூரி தேவைப்படுகிறதா என்பதுபற்றி ஆராய வேண்டும். அதிலே குறைபாடுகள் இருந்தால், பார்க்கலாம். இப்போதே நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. இவை தவிர, மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லிலே ஒரு கல்லூரியும், பழனியிலே ஒரு கல்லூரியும்,

1975 அக்டோபர் 24]

பெரியகுளத்திலே ஒரு கல்லூரியும், ஆக மூன்று கல்லூரிகளையும் சேர்த்து, மதுரை மாவட்டத்தில் மொத்தம் ஏழு கல்லூரிகள் இருக்கின்றன. அந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவில், ஏழு கல்லூரிகள் அமைந்திருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி திருப்பரங்குன்றத்திலே நிபந்தனையின் அடிப்படையிலே திறக்கப்பட்டது. அடுத்த பள்ளியில் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையோடுதான் அங்கீகாரம் அளிப்பதாக கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னூர்கள். நடைமுறையில் நிபந்தனையை அமுல் நடத்தாமல் போனுல், அங்கீகாரம் ரத்து செய்யப்படுமா? கல்வி அமைச்சர் அவர்கள் அங்கீகாரம் ரத்தாகலாம் என்று சொன்னூர்கள். அப்படி ரத்து செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இருந்தால், இருந்தால் என்று சொல்வதைவிட, இப்படி இருக்கிறது என்று சொன்னுல், பிரச்சினையில் தீர்வு காணலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: ஒரு பள்ளியைப் புதிதாகத் திறகிறபோது, அதன் அருகிலே உள்ள பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து, அதனுல் ஆசிரியர்கள் வேலை நீக்கம் ஏற்படும் என்ற அச்சம் இருக்கிறது. வேலை இழப்பு ஏற்பட்ட ஆசிரியர்களுக்குப் புதிதாகத் திறக்கிற பள்ளியில் வேலை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவாதத்தை வாங்கிய பிறகு, அங்கீகாரம் கொடுப்பதாக கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னூர்கள். உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்லுகிறேன். அம்சி என்ற இடத்தில் உள்ள தனியார் பள்ளிக்குப் பக்கத்தில் அரசு ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பித்தது அதனுல் வேலை இழப்பு ஏற்படும் என்று தனியார் பள்ளி ஆசிரியர்கள் முறையிட்டார்கள். அதற்கு அரசு உத்தரவாதம் கொடுத்து, வேலை இழப்பு ஏற்பட்ட ஆசிரியரை அரசுப் பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக்கொண்டது. அரசு அப்படிப்பட்ட உத்தரவு இட்டால், பள்ளியில் அவர்கள் இருந்துகொண்டிருப்பார்கள். மாணுக்கர் இல்லை என்ருலும், அவர்களுக்கு அரசு சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். எனவே, பழைய பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் பட்டியல் ஒன்றை வாங்கி, கடைசியில் வேலை இழந்தவர்கள் புதிய பள்ளியில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற நிபந்தனைப்படி, அங்கீகாரம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்படி ஏதாவது இருந்தால், கூறுங்கள் என்று சொன்னார்கள். தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அளவுக்கு, மாணவர்களுக்கு ரெக்கார்ட் ஷீட் கொடுத்து, அந்த ஆசிரியர்கள் அனுப்பப்படுகிறார்கள். டி.ஈ.ஓ., போஸ்டு கொடுத்து அவரை இன்னொரு பள்ளியில் போடலாம் என்று அரசு உத்தரவு இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இல்லாத காரணத்தினால், தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். புதிய பள்ளிகள் திறக்கும் போதும், மாணாக்கர்களுக்கு ரிக்கார்ட் ஷீட் கொடுத்தனுப்புவது போன்ற காரணங்களால், ஆசிரியர்கள் வேலை இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்படும் நிலைமை யில் இருக்கின்றார்கள். இதை நீக்குவதற்கு, ஒரு போஸ்டை எடுத்து இன்னொரு பள்ளிக்குக் கொடுக்கும்போது, அந்த போஸ்டோடு ஆசிரியரையும் அந்தப் பள்ளிக்குச் சேர்த்துப் போடும்படியான உத்தரவை அரசு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் பதில் சொல்லும்போது திருப்பரங்குன்றம் பள்ளியைப் பொறுத்துத்தான் சொன்னேன். அந்தப் பள்ளிக்கு நிபந்தனையின் பேரில்தான் அங்கீகாரம் கொடுத்திருக்கிறோம். மற்ற இடங்களில் ஆசிரியர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், பரிசீலித்து அதை நீக்குவதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

Second Grade Tamil Pandits working in Government High Schools.

*6 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether under G.O. Ms. No. 63, Education, dated 17th January 1974 and G.O. Ms. No. 1750, Education, dated 9th October 1974, only Secondary Grade Tamil Pandits working in Private Management Schools, have been raised to the cadre of First Grade Tamil Pandits;

(*b*) if so, the reason for not extending the same benefit to such Pandits, working in Government High Schools; and

(*c*) whether there is any proposal to rectify this anomaly?